
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1168

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

110

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

'தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மாநாடு', மன்னார்குடியில் 1932-ஆம் ஆண்டு, ஜூன் 18, 19 ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதனுடன் சேர்த்து தொண்டர் படை மாநாடும் நடைபெற்றது. ஏற்கெனவே, கடந்த ஆண்டில் தரங்கம்பாடியில் தொடங்கி, நாகை, நன்னிலத்தில் சுயமரியாதை மாநாடுகளும், திருவாரூரில், சென்னை மாகாண தொண்டர் படை மாநாடும் நடைபெற்றிருந்தது. எண்ணற்ற பொதுக்கூட்டங்களும் தஞ்சை ஜில்லாவில் நடைபெற்றுள்ளன. ஆனால், தஞ்சை ஜில்லாவில் சுயமரியாதை இயக்கம் மாண்டுவிட்டது என கொள்கை எதிரிகள் பொய்ப்பிரச்சாரம் செய்துகொண்டிருந்த வேளையில் நடைபெற்றது இம்மாநாடு.

குறிப்பாக, அன்றைக்கு தஞ்சை ஜில்லாவில் வைதீகக் கோட்டையாகக் கருதப்பட்ட இடம் மன்னார்குடி. காங்கிரஸ்காரர்களும் பார்ப்பனர்களும் அதிகம் இருந்த இடமும் கூட. ஆனால், சுயமரியாதை இயக்கம் எத்தகைய வலுவோடு இருந்தது என்பதை, வெளிக்காட்டும் விதமாக மன்னார்குடியில் இந்த மாநாட்டை நடத்தினார்கள். மற்றொரு சிறப்பும் இந்த மாநாட்டிற்கு உண்டு. பெரும்பாலும், பெண்கள் மாநாட்டைத் தவிர, வேறு எந்த மாநாடுகளிலும் பெண்கள் தலைமையேற்கவில்லை. ஆனால், இம்மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் குஞ்சிதம் குருசாமி அம்மையார். முத்துசாமி வல்லத்தரசு மாநாட்டைத் திறந்துவைத்தார். எ.ஆறுமுகம் வரவேற்புரையாற்றினார்.

மாநாட்டில், குஞ்சிதம் குருசாமி உரையாற்றியபோது, எழுப்பிய அடுக்கடுக்கான

ஓவியம் : சிகரன்




## சமஸ்கிருதம், என்ன பாட்டன் வீட்டுப் பாஷையா?

கேள்விகள் இன்றைக்கும் சங் பரிவார்களுக்கு பொருத்தமான பதில்கள். "ஆங்கிலேயர்கள் அந்நியர்கள் என்றால், பார்ப்பனர்கள் யார்? இங்கிலீஷ் அந்நிய பாஷை என்றால், சமஸ்கிருதம் என்ன பாட்டன் வீட்டுப் பாஷையா? அவர்கள் சொல்லுகிறபடி பார்த்தால், 400 வருசத்துக்கு முன்னால் வந்த ஆங்கிலேய ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்றால், 2000 வருசத்துக்கு முன்பு வந்த பார்ப்பன ஆட்சியை ஒழிக்க வேண்டுமல்லவா? 400 வருசத்துக்கு முன் வந்த இங்கிலீஷ் கூடாது என்றால், 2000 வருசமாக நமது சமூகத்தில் 'பராசரஸ்மிருதி', 'மநு தர்மம்' முதலிய கொடூரச் சட்டங்களைச் செய்த அந்நிய சமஸ்கிருத பாஷையை அடியோடு அழிக்க வேண்டாமா?" என்று ஆவேசமாகப் பேசினார்.

இம்மாநாடு முடிந்த மறுநாளே திருவிடைமருதூரில், 'பிராமணர் மாநாடு' ஒன்று நடைபெற்றது. பெண்கள் மாநாடுகளைக் கண்டித்து அந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெண்கள் மாநாடுகள் எல்லாம் மேல்நாட்டுக் கல்வி கற்ற பெண்களால் கூட்டப்படுகிறதென்றும், அவர்கள் விரும்பும் சுதந்திரங்கள், மதத்துக்கும் சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் எதிரானவை என்றும், அவற்றை மக்கள் விரும்பவில்லை என்றும் தீர்மானத்தில் அரசுக்கு எச்சரிக்கை செய்தனர்.

இதற்கு பதிலடி கொடுத்த 'குடி அரசு' ஏடு, "இன்று பெண்கள் விரும்பும் சுதந்திரமும், கல்வி அறிவும், சுகாதார வாழ்க்கையும், தங்கள் விருப்பப்படி மணஞ்செய்துகொள்ளும் உரிமையும் விதவைகள் ஆகிவிட்டால், மறுமணம் செய்துகொள்ளும் உரிமையும், கணவனுடைய கொடுமையையோ, நடத்தையையோ சகித்துக்கொள்ள முடியாதபோது மணவிலக்கு செய்துகொள்கிற உரிமையும், சட்ட சபைகளில், அரசு ஸ்தாபனங்களில் இடம்பெறும் உரிமையும் கேட்கிறார்கள். இவ்வுரிமைகள் எல்லாம் இன்று ஆண்களுக்கு எவ்வாறு இருக்கின்றனவோ, பெண்களுக்கும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று கேட்பதில், என்ன தவறு இருக்கிறது?' எனக் கேள்வி எழுப்பியது.

இத்தகைய மாநாடுகளும், அதனால் ஏற்பட்ட விவாதங்களும் வைதீகத்தின் வேரில் வெந்நீரைப் பாய்ச்சின. அதில் வேர்விட்டு டெல்டாவில் வலுப்பெற்றது சுயமரியாதை இயக்கம்.

...கூட்டம் திரளும்

## வயதைக் கடந்த பரப்புரை பயணம்!

2026-ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவுக்கு இன்னும் 9 நாட்களே உள்ளன. ஐந்து ஆண்டுக்கால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் ஒவ்வொன்றையும் எடுத்துக்கூறி, மக்களுக்குத் தந்திருக்கக்கூடிய பயன்களை விளக்கி, வாக்கு சேகரித்து வருகின்றனர் கழக நிர்வாகிகள். கழகத் தலைவர் அவர்களும், இளைஞர் அணிச் செயலாளர் அவர்களும் களத்தில் ஓய்வின்றி பம்பரமாகச் சுழன்று வருகின்றனர். அவர்களுக்கு இணையாக 92 வயது நிறைந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்களும், கடும் வெயிலிலும் பரப்புரை செய்து கவனம் ஈர்த்து வருகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பிலான வேட்பாளர்களை ஆதரித்து, வயதைக் கடந்தும் அவர் பயணம் மேற்கொள்கிறார். தொடர் கூட்டங்கள், தொடர்ந்து பேசும் உறுதி இவை அனைத்தும், வெறும் ஆதரவு அல்ல, திராவிட இயக்கத்தின் அடிப்படை மதிப்புகளைத் தூக்கி சுமக்கும் இயக்கம் தி.மு.க. என்பதை உறுதிசெய்யும் செயல் என சமூக வலைதளங்களில் பலரும் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

கடந்த 6-ஆம் தேதி தொடங்கிய அவரது பரப்புரைப் பயணம் 21-ஆம் தேதி வரை திட்டமிடப்பட்டுள்ளது. திராவிட இயக்கத்தை மீண்டும் அரியணையில் அமர்த்த வேண்டும், அதன் மூலம் தொடரவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் நிறைவேற்றவிருக்கும் சாதனைத் திட்டங்களை அவர் பேசுவது, சமூக ஊடகங்களில் கவனம் பெற்றுள்ளது. ஆசிரியர் அவர்களின் களப்பணியை, கழகத் தலைவர் அவர்களும் சமூக வலைதளப் பக்கத்தில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் எண்ணம் ஈடேறும்.

**கழகம் வெல்லும்! தமிழ்நாடு வெல்லும்!**

## ஃப்ளாஷ்பேக்



### 20 ஆண்டுகளுக்கு முன் தலைவருடன்...



கே.பவுனேசன்

2006-ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் கழக ஒன்றியப் பொறுப்பாளராக இருந்த பி.என்.பெரியண்ணன் அவர்களின் மகள் திருமணத்துக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்து நடத்தி வைத்தார். கிளைக் கழகப் பிரதிநிதியாக இருந்த நான் தலைவரைச் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்து வாழ்த்துப் பெற்றேன். 20 ஆண்டுகள் கடந்திருந்தாலும், கழகத் தலைவரைச் சந்தித்த அந்த நாளையும் அந்த நிமிடங்களையும் கடுகளவும் மறக்கவில்லை.

**- கே.பவுனேசன்,**
**துணை அமைப்பாளர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி,**
**பென்னாகரம், தருமபுரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

110


**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## திசையைத் தீர்மானிக்கும் தேர்தல்!

உலகின் மிகப் பழைமையான ஜனநாயக நாடான அமெரிக்காவின் அதிபர் தேர்தல் பற்றி, சர்வதேச நாடுகளில் மிகவும் பரபரப்பாகப் பேசப்படுவது ஒரு வழக்கமாகவே மாறியுள்ளது. அதேவேளையில், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் தேர்தல்-ஜனநாயகம் குறித்து மக்களுக்கு இருக்கும் புரிதல் மிகவும் மேம்போக்கானது.

இந்தியாவின் தேர்தல் எவ்வளவு சிக்கல் நிறைந்தது என்பதை, முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி எஸ்.ஒய்.குரைஸ்சி (S.Y.QURAISHI) எழுதிய 'ஆன் அண்டாக்குமென்டட் ஒண்டர்' (AN UNDOCUMENTED WONDER) என்ற நூலை வாசிக்கும்போது புரியவருகிறது. தமிழ்நாட்டில் 2026-ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் இத்தருணத்தில் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது.

படிக்கப் படிக்க வியப்பும், பிரமிப்பும் ஒட்டிக்கொள்கிறது, மகாத்மா காந்தியின் பெயரன் கோபால்கிருஷ்ண காந்தி இந்த நூலுக்கு எழுதிய முன்னுரையில் தாஜ்மஹால், மகாத்மா காந்தி ஆகிய இரண்டு விசயங்களுக்குப் பிறகு, மதிப்புமிக்க அதிசயம் என்னவென்றால், இந்தியாவின் தேர்தல் ஜனநாயகம் என்கிறார்.




காலம்காலமாகத், தேர்தல் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துள்ளது, சுதந்திரத்திற்குப் பின்பு நடந்த முதல் தேர்தலில், வேட்பாளர்களின் பெயர் பொறித்த பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. அதில் தேர்தல் ஆணையத்தின் முத்திரை பொறித்த வாக்குச் சீட்டுகளைக் கொண்டு வாக்களிக்கும் முறை இருந்தது, அதன் பின் வாக்குசீட்டில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் கட்சி சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டு வாக்குப் பெட்டியில் செலுத்தும் நூலின் நிறைவில், இதைப் படிக்கும் அனைவரும் உணர முடியும்.

இந்த நூலில், தேர்தல் பற்றிய ஒரு சுருக்கமான வரலாறும் அதைத் தொடர்ந்து இந்தியாவின் தேர்தல்-ஜனநாயகம், தேர்தல் ஆணையம், அதன் உறுப்புகள் மற்றும் உரிமைகள், வாக்காளர் உரிமைகள், ஊடகத் தாக்கம், இளைஞர்களுக்குத் தேர்தல் பற்றிய அறிவூட்டல், தொழில்நுட்பமும் தேர்தல் ஜனநாயகமும், பணம் மற்றும் ஊழல் ஆகியவை குறித்தெல்லாம் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

> **இந்தியாவில் தேர்தல் முறை பல்வேறு மாற்றங்களை அடைந்துள்ளது. இன்னும் பல ஜனநாயக நாடுகள் வாக்குச் சீட்டு முறையைத்தான் பயன்படுத்தி வருகின்றன.**

முறை இருந்தது. 90-களின் பிற்பகுதியில், சட்டத்திருத்தம் செய்யப்பட்டு, மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் அறிமுகம் செய்யப்பட்டது, அதன் பின் NOTA அறிமுகப் படுத்தப்பட்டு, ஒரு வாய்ப்பாக இணைக்கப் பட்டது, 2013-ஆம் ஆண்டு தேர்தல் முதல், யாருக்கு வாக்களித்தோம் என உறுதிப்படுத்த VVPAT (VOTER-VERIFIED PAPER AUDIT TRAIL) அறிமுகப் படுத்தியது வரை இந்தியாவில் தேர்தல் முறை பல்வேறு மாற்றங்களை அடைந்துள்ளது. இன்னும் பல ஜனநாயக நாடுகள் வாக்குச் சீட்டு முறையைத்தான் பயன்படுத்தி வருகின்றன.

இப்படிப் பல்வேறு செய்திகள் அனைவரும் அறிந்துகொள்ளும் விதத்தில், எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. நூல் ஆசிரியர் முன்னாள் தேர்தல் ஆணையர் என்பதால், கள எடுத்துக்காட்டுகளுடனும், தான் சந்தித்த பிரச்சினைகளுடனும் அனுபவபூர்வமான தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

தேர்தல் அரசியலில் நாட்டமுள்ள, அரசியல் தளத்தில் இயங்கும் தோழர்கள், உடன்பிறப்புகள் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகம்.

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### இலட்சியம் தூய்மையானது!

1967-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 14-ஆம் தேதி, பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக வானொலியில் உரையாற்றினார். "நண்பர்களே! உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல, உங்களால் நான். மக்களுக்கு நல்வாழ்வு தர வேண்டும், இந்த இலட்சியம் தூய்மையானது. இலட்சியம் மிகப் பெரியது. நான் சாமானியன். ஆனால், உங்கள் தோழன். ஆகவே, என்னுடைய திறமையை நம்பியல்ல; உங்கள் எல்லோருடைய திறமையையும் நம்பி இந்தப் பணியில் ஈடுபடுகின்றேன்" என உணர்வுபூர்வமான உரை நிகழ்த்தினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900